# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590


**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 1133/F/2024**

திரு.M.லலித்குமார் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
அரசு சார்பு செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை, .. பொது அதிகார அமைப்பு
தலைமைச் செயலகம்,
சென்னை-09.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.M.லலித்குமார் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.ப.முத்துகுமார், பிரிவு அலுவலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 27/11/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் The Xerox copy of the CMDA issued notice calling for approved plan vide No.A.2508 dated 07/09/2021 என்பன போன்ற 6 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 28.12.2023 நாளிட்ட கடிதம் மூலம் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மனுவினை உரிய பொது அதிகார அமைப்பிற்கு

மாற்றம் செய்துள்ளார். அதனைப் பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 28.12.2023 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 30.01.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 28.12.2023 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் மற்றும் பொதுத்தகவல் அலுவலர் சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம், எழும்பூர் அவர்கள் 09.02.2024 மற்றும் 11.03.2024 நாளிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கியிருப்பதாகக் கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணங்கள் ஏற்புடையது அல்ல எனக் கருதி இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவினை உரிய காலத்தில் மாற்றம் செய்யாத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திருமதி.N.அருணாதேவி, சார்புச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை மற்றும் 28.12.2023 நாளிட்ட 19(1)ன் கீழ் மனுதாரர் தாக்கல் செய்துள்ள முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு தகவல் வழங்காத அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம் சென்னை அவர்களுக்கு சட்ட பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 18.06.2026 அன்று அப்போதைய பொதுதகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1133/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
அரசு சார்பு செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09.

**அப்போதைய பொதுதகவல் அலுவலர்**,
அரசு சார்பு செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்,**
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.லலித் குமார்,
23, இரட்டைமால் தெரு,
தெப்பகுளம்,
திருச்சிராப்பள்ளி-620002.

Copy to file: KR/PA